# இராமநாதபுரம் நகராட்சி

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 டிசம்பர் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 31.12.2019–ந் தேதி காலை 11.38 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் 1**

இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் டிசம்பர் 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.1066**– பதிவு செய்யப்பட்டது.

**பொருள் 2**

இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் டிசம்பர் 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.1067**– பதிவு செய்யப்பட்டது.

**பொருள் 3**

இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–29, கதவு எண் 7A/2, ரயில்வே லையன் பாதை உள்ள சர்வே எண்.19–ல் திரு.முகம்மது தாருக் என்பவர் தன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக் கோரிய மனுமீது ஆட்சேபனை செய்து திரு.பிர்தௌஸ்கான் என்பவர் இராமநாதபுரம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.மு.வ.84/2016ல் வழக்கு தொடரப்பட்டுள்ள வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி இருவருடைய மனுக்கள் மீது சட்ட கருத்துரு வழங்க நகர்மன்ற வழக்கறிஞர் திரு.என்.சரவணபாபு என்பவருக்கு சட்ட கருத்துரு கட்டணம் ரூ.5,000/–ம் வழங்க மன்றம் பொருள் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோப்பு எண்.113/2019/அ1**

**தீர்மானம் எண்.1068**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 4**

இராமநாதபுரம் நகராட்சி, வளர்ச்சித் திட்டம் மற்றும் சாதனைகள் குறித்து தீபாவளி மலர் –2019ல் விளம்பரம் வெளியிட்டதற்கும், Turip 2019–20–ன் கீழ் ரூ.500.00/– லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரியதற்கு விளம்பரம் வெளியிட்ட வகையில் பட்டியல் தொகை வழங்க கீழ்க்கண்டவாறாக

விளம்பதாரார்க்குரிய மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விளம்பரதாரர்களின்பெயர்கள் | பில் நம்பர் மற்றும் நாள் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | நமது முரசு, மாலை நாளிதழ் | 0101/ 27.10.2019 | 8,505/– |
| 2 | Deccan Choronicle, Tamilnadu | AAA/0355/19–20, 22.10.2019 | 33,264/– |
| 3 | மாலை மலர் நாளிதழ், TamilNadu | AAA/0355/19–20, 22.10.2019 | 15,504/– |
| | | CGST 2.50% | 1,219.20 |
| | | SGST 2.50% | 1,219.20 |
| | | | 51,206 |

**அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.3877/2014/இ1**

**தீர்மானம் எண்.1069**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 5**

இராமநாதபுரம் நகராட்சி அரசு தலைமை மருத்துவமனையில் பிறந்த குழந்தையின் பிறப்புச் சான்றிதழில் தந்தை பெயர் திருத்தக் கோரி குழந்தையின் தாயார் திருமதி. அந்தோணியம்மாள் என்பவர் இராமநாதபுரம் நகராட்சி மீது தொடரப்பட்ட வழக்கில் (ஓ.எஸ்.நம்பர்.56/2019) நகராட்சி சார்பாக வழக்கை எடுத்து நடத்துவதற்கு வக்காலத்து தொகை மற்றும் வழக்கு கட்டணம் ரூ.5000/–ம் வழக்கறிஞர் திரு.என்.சரவணபாபு ,பி.ஏ.பி.எல்., அவர்களுக்கு வழங்குவதற்கு செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.**

(ந.க.எண்.2436/2019/எச்1)

**தீர்மானம் எண்.1070**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 6**

இராமநாதபுரம் நகராட்சி வார்டு – F, பிளாக் –10, நகர புல எண் 15 முதல் 76 வரை, வார்டு –எப், பிளாக்–14–ல் நகரபுல எண் 1 முதல் 88 வரை அமைந்துள்ள அருள்மிகு வீரபத்திர சுவாமி திருக்கோவில் இடம் உட்பிரிவு செய்து தனிநபர்கள் பட்டா மாற்றம் செய்தது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P(MD)No.23938–2018 வழக்கு கவுண்டர் தயார் செய்து நீதிமன்றத்தில் 11.12.2019 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் வழக்கிற்கு வழக்கு கட்டணமாக ரூ.15,000/– வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்ற பொருள் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1882/2016/எப்1

**<u>தீர்மானம் எண்.1071</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 7</u>**

இராமநாதபுரம் நகராட்சி, வார்டு –D, பிளாக்–1, நகரபுல எண்.8 மற்றும் 9/1 ஓம் மகாசக்தி உதிரகாளி கோவில் கட்டியது ஆக்கிரமிப்பு அகற்றிட கோரி திரு.சுப.நாகராஜன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண்.WP(MD) 18015/2018 மேற்காணும் வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்திட வழக்கு கட்டணமாக ரூ.15,000/– வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்ற பொருள் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.781/2018/எப்1

**<u>தீர்மானம் எண்.1072</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 8</u>**

இராமநாதபுரம் நகராட்சி, அவசர அவசியம் கருதி, சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் 01.10.2019 முதல் 31.12.2019 வரையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்ட வகையில் கீழ்க்கண்டவாறாக செலவினம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | இராமநாதபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள 15KVA ஜெனரேட்டரில் Filed Coil பழுதாகியுள்ளதற்கு பழுது நீக்கம் அகற்றி இயக்கி கொடுக்கும் பணி முடிவுற்றுள்ளதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ. 37,400/– |
| 2. | இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக வளாகத்தில் உள்ள 3''Phase EB – Board–யிலிருந்து Short Circuit–ல் மின் கசிவு ஏற்பட்டுள்ளதை அகற்றி புதிய வயரிங் மாற்றி கொடுக்கும் பணி முடிவுற்றதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.34,600/– |
| 3. | இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்.22ல் வள்ளல்பாரி நடுநிலைப்பள்ளியில் அருகில் கீரைக்கார ஊரணி மேற்கு தெருவில் கழிவுநீர் சேகரம் கட்டமைப்பு (Collection System)–உழவர் சந்தை எதிர்புறம் உள்ள மனித ஆய்வு குழிகளுக்கு இடையில் Pipe Line உடைப்பு ஏற்பட்டுள்ளதை சரி செய்து கொடுக்கும் பணி முடிவுற்றதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.71,598/– |
| | இராமநாதபுரம் நகராட்சி, உள்ளாட்சி தேர்தல் –2019க்கான மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் (EVM) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் | |

| | | |
|---|---|---|
| 4. | அலுவலகத்திலிருந்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டதற்கான ஏற்றுக்கூலி, இறக்கு கூலி, வண்டி வாடகை(Call Taxi) தங்கும் அறை ஆகிய செலவினம் மேற்கொண்ட வகையில் பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.28,100/– |
| 5. | இராமநாதபுரம் நகராட்சி, திடக்கழிவு மேலாண்மை திட்டம், முதல்நிலை குப்பை சேகரிப்புக்கான மின்கலம் இயங்கும் வாகனத்திற்கு (BOV) Charging Plug Point -24 எண்ணம் அமைத்து கொடுக்கும் பணி முடிவுற்றதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.35,986/– |
| 6. | இராமநாதபுரம் நகராட்சி, உள்ளாட்சி தேர்தல் 2019–க்கான EVM சரிபார்ப்பு பணிக்கு (FLC) தேவையான அடிப்படை வசதிகள், மற்றும் உணவு, தளவாட சாமான்கள் 26.09.2019 முதல் 18.10.2019 வரையிலான நாட்களுக்கு செலவினம் மேற்கொண்டதற்கு பட்யடில் தொகை வழங்கிய முறையே | ரூ.23,140/– |
| 7. | இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக ஈப்பு வாகனம் (புதியது) TN65–AF–4353 வாகனத்திற்கு Oil Filter, Kit Filter Element and Wheel Alignment and Washing Charges பணிமேற்கொண்டதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.8,261/– |
| 8. | இராமநாதபுரம் நகராட்சி, கணிணி பிரிவில் உள்ள அச்சுப் பொறிகள் 5 எண்ணம் (DOT Matrix Printers – 5"Nos) பழுதாகியுள்ளதற்கு பழுது நீக்கம் அகற்றி இயக்கி கொடுக்கும் பணி முடிவுற்றதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.17,800/– |
| 9. | இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம், மண்டலம் –III முதல் மண்டலம்–IV வரை செல்லும் பிரதான கழிவுநீர் குழாய் (Pumping Main) லெட்சுமிபுரம் தென்கரையில் உடைப்பு ஏற்பட்டுள்ளதை சரி செய்து கொடுக்கும் பணி முடிவுற்றதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | ரூ.2,70,470/– |

<u>அலுவலக குறிப்பு</u> – தமிழ்நாடு மாநில நகராட்சி சட்டம் 1920 – விதி 15–ன் கீழ் மேற்கண்டவாறு மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பதிவேடு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.877/2016/இ1

**<u>தீர்மானம் எண்.1073</u>**– பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் 9</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் 2019–20, மதுரை–மண்டபம் சாலை பயோனியர் மருத்துவமனையில் இருந்து குமரைய்யா கோவில் வரை உள்ள 60–எண்ணம் மனித ஆய்வு குழிகளை உயர்த்தி கட்டும் பணிக்கு 13.12.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.கே.திருமுருகன். ஒப்பந்ததாரர். 34, வடக்கு புதுத் தெரு. இராமநாதபுரம். | 2,50,000/– | 0.15 % சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.கே.சத்தியநாதன் ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 2,50,000/– | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.கே.திருமுருகன், இராமநாதபுரம் அவர்களது 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 3705/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1074</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 10</u>**

இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான உட்புற சாலைகளில் AG&P CGD (City Gas Distribution) இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் டோரண்ட் கேஸ் பிரைவேட் லிமிடெட் மூலம் எரிவாயு விநியோகக் குழாய் பதிக்கும் பணிக்கு சேதாரக் கட்டணம் மற்றும் வருடாந்திர வாடகைக் கட்டணம் நிர்ணயம் செய்து வழங்கக் கேட்டு கூடுதல் அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் கடிதம் எண்: 29778/MA–3 (2) 2019–1, நாள்: 09.12.2019–ல் வரப்பெற்றுள்ள கடிதம் தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்டதும், நகராட்சிக்கு சொந்தமான உட்புற சாலைகளில் மறு சீரமைப்பு பணிகள் (Restoration Works) மேற்கொள்ள சேதாரக் கட்டணம் கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டு, தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலைகளின் பெயர் | கி.மீ 1–க்கு |
|---|---|---|
| 1 | தார் சாலைகள் | ரூ.33.00 லட்சம் |
| 2 | சிமெண்ட் சாலைகள் | ரூ.37.00 லட்சம் |
| 3 | பேவர் பிளாக் சாலைகள் | ரூ.28.00 லட்சம் |
| 4 | குடிநீர் குழாய் மாற்றியமைத்தல் (அல்லது) சேதமடைந்தது சீர் செய்யும் பணி | ரூ.4.00 லட்சம் |
| 5 | பாதாள சாக்கடை திட்ட பிரதான குழாய் மாற்றியமைத்தல் (அல்லது) சேதமடைந்தது சீர் செய்யும் பணி | ரூ.4.00 லட்சம் |
| 6 | எரிவாயு குழாய் செல்வதற்கு வருடாந்திர வாடகை (Annual Track Rent) | ரூ.5,500/– |

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்டவாறு சீரமைப்புக் கட்டணம் மற்றும் வருடாந்திர வாடகை (Annual Track Rent) நிர்ணயம் செய்திட அனுமதிக்கலாம். சம்மந்தப்பட்ட கம்பெனிகள் இந்நகராட்சிக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில், கேட்பு நிர்ணயம் செய்து வழங்கலாம்.
3. கூடுதல் அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

ந.க.எண்: 2483/2019/இ1

**தீர்மானம் எண்.1075–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 11**

இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான பாத்தியமான ஆண்டு குத்தகை இனங்கள் கீழ்க்கண்ட விபரப்படி 31.03.2020 உடன் முடிவடைகிறது. எனவே, கீழ்க்கண்ட விபரப்படியுள்ள ஆண்டு குத்தகையினங்களை 1.4.2020 முதல் மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் 2020–2021 முதல் 2022–2023 முடிய பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனம் | ஏலக்கேள்வி காப்புத் தொகை | கூடுதல் காப்புத் தொகை | மின்கட்டண வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | சாலை ஓரங்களில் வியாபாரம் செய்வதை நகராட்சியில் ஒழுங்கு படுத்தி கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 10,00,000 | 10,00,000 | –– |
| 2 | பாண்டிக்கண்மாய் சாமி தெருவில் உள்ள கட்டணம் கழிப்பறை மற்றும் குளியல் அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 3,00,000 | 2,00,000 | 2,000 |

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஏலம்/குத்தகை நிபந்தனைகளுக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

கோப்பு எண்: ந.க.எண்: 3868/2019/அ1

**<u>தீர்மானம் எண்.1076</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 12</u>**

இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் சந்தைபேட்டை சாலையில் 8x8=64 சதுர அடி அளவில் தேனீர் நிலையம் (டான் டீ) அமைக்க தமிழ்நாடு டீ தயாரிப்பு நிறுவனம், குன்னூர் அவர்களின் கடிதம் எண்.54/2510/2018, நாள்.17.4.2018–ல் கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட இடத்திற்கு தற்போதைய பத்திர பதிவுத்துறை சார்பதிவாளர் இணையதள மதிப்பீடின்படி மாதவாடகை ரூ.1500/– 8x8=64 சதுர அடிக்கு நிர்ணயம் செய்து மற்றும் சேவை வரியுடன் சேர்த்து வசூலிக்கவும் அரசாணை எண்.(நிலை) எண்.285 நாள்.29.04.1985, அரசாணை எண்.(நிலை) எண்.857, நாள்.21.07.1986, அரசாணை எண்.(நிலை) எண்.135 நாள்.13.07.1994–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதியுடன் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் சந்தைப்பேட்டை சாலையில் 8x8=64 சதுர அடி அளவில் தேநீர் நிலையம் (டான் டீ) அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது அனுமதி பெறுவதற்காக தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களுக்கு மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**

1. மாத வாடகை ரூ.1,500/– என நிர்ணயம் செய்து சேவைவரியுடன் சேர்த்து வசூலிக்கவும், அரசாணை எண்.(நிலை) எண்.285, நாள்.29.04.1985, அரசாணை எண்.(நிலை) எண்.857, நாள்.21.07.1986, அரசாணை (நிலை) எண்.135 நாள்.13.07.1994–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்: ந.க.எண்: 1872/2018/அ1

**<u>தீர்மானம் எண்.1077</u>**– அலுவலக குறிப்புகள் ஏற்கப்பட்டன.

**<u>பொருள் 13</u>**

இராமநாதபுரம் நகராட்சி, சிதம்பரம் பிள்ளை ஊரணியில் கிழக்கு பகுதியில் 20 அடி பொது பாதையாக பயன்படுத்த கோரி திரு.ஈஸ்வர பிரசாத் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளதை தொடர்ந்து வழக்கு எண்.ஓ.எஸ்.எண்.35/2015 அரசுக்கு எதிரான தீர்ப்பு வரப்பட்டுள்ளதை எதிர்த்து சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு செய்யப்பட்டது (Delay Contom) அனுமதிக்கப்பட்டு IANo.99/2019 எண் பெறப்பட்டு A.S.No.28/2019 அப்பீல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது. A.S.No.28/2019க்கு வழக்கு கட்டணம் ரூ.5,000/– திரு.என்.சரவணபாபு, வழக்கறிஞர் என்பவர்க்கு வழங்க மன்ற பொருள் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 0594/2015/F1

**<u>தீர்மானம் எண்.1078</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 14</u>**

இராமநாதபுரம் நகராட்சி, சிறப்பு நிலை நகராட்சி மற்றும் மாவட்ட தலைநகரமாகும். மக்கள் தொகை 64257 (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) ஆகும். 33 வார்டுகளை கொண்ட இந்நகராட்சியில் மொத்தம் 63.27 கி.மீட்டர் நீளம் சாலைகள் பராமரிக்கப்படுகிறது. தெருவிளக்குகள் 1947—எண்ணம் பராமரிக்கப்படுகிறது.

தெருவிளக்கு பராமரிப்பினை 3 மின்கம்பி பணியாளர்களை கொண்டு இயக்கப்படுகிறது. தெருவிளக்கு பராமரிப்பிற்கு போதிய பணியாளர்கள் இல்லாததால் பராமரிப்பில் தேக்க நிலை ஏற்பட்டு, எரியாத தெருவிளக்குகள் சம்பந்தமான புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. நகராட்சியில் தெருவிளக்கு தளவாட சாமான்கள் கொள்முதல் மற்றும் இயக்குதலும் பேணுதலும் பராமரிப்பு செலவினம், தனியார் மயமாக்குதல் செலவினத்தை ஒப்பிடுகையில் கூடுதலாக உள்ளது.

எனவே, இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிபினை தனியாரிடம் (எந்த வகையிலும் ஏகபோகத்திற்கு வழி ஏற்படுத்தாமல்) ஒப்படைக்க அவசியம் ஏற்படுகின்றது. வருடாந்திர பராமரிப்பு செலவினம் ரூ.35.00 இலட்சம் ஆகும். தெருவிளக்கு பராமரிப்பினை தனியார் ஒப்பந்ததாரரின் மூலம் ஒப்படைக்க முன்இசைவு (Principle Clearance) வேண்டி அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:—</u>** 1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)தெருவிளக்கு பராமரிப்பு தனியார் வசம் ஒப்படைத்தல், அவசர அவசியம் முன்னிட்டு பிரேரணை முன்இசைவு பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்..

ந.க.எண்:3922/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1079</u>**— அலுவலக குறிப்புகள் ஏற்கப்பட்டன.

**<u>பொருள் 15</u>**

இராமநாதபுரம் நகராட்சிப் பகுதிகளின் பிரதான சாலைகளில் புழுதிமண் அதிகம் இருப்பதால் வாகனங்கள் செல்லும் போதும், நடைபாதையில் நடக்கும் மக்களுக்கு தூசி பறந்து இடையூறு ஏற்படுவதாலும், நகரின் முக்கிய சாலைகளில் உள்ள மண்களை கூட்டி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியுள்ளதின் பேரில், துப்புரவு பணியாளர்களை கொண்டு கூட்டுத் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான உபகரணங்கள் பிரஸ் கட்டை 100 எண்ணம் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.80,000/—க்கு (என்பதாயிரம்) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு —</u>** பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.1080</u>**— அலுவலக குறிப்புகள் ஏற்பு.

**<u>பொருள் 16</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவு, வீடு வீடாக சென்று பிரித்து வாங்கும் குப்பைகளில் உலர் குப்பைகள் நகராட்சி உரக்கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டு வருகிறது. இக்கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பி வைக்க Baling Machine-1 எண்ணம் தேவைப்படுகிறது. எனவே, மேற்படி புதிய Baling Machine-1 எண்ணம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்காணும் விநியோகம் செய்யும் பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 3921/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1081</u>–** அலுவலக குறிப்புகள் ஏற்கப்பட்டன.

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்
இராமநாதபுரம் நகராட்சி